1971 அக்டோபர் 21] [பேரவைத் தலைவர்]

வாய்ப்பு இருக்கிறது என்ற நிலைமையில் என்னுடைய கருத்தைச் சொல்லிக் கொண்டு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடுகிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி :

'தமிழ்நாடு சட்டப்பேரவையின் 23 (1)-வது விதியைத் தள்ளி வைத்து இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக் கொள்ள வேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் இன்னொரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, சட்டப்பேரவை விதிகள் 23 (1)-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள இனம் '5. சட்டமுன்வடிவு' என்பதை இனம் '4. அரசினர் தீர்மானம்' என்பதற்கு முன்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1971.)

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I move—

"That leave be granted for the withdrawal of the Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Bill, 1971 (L.A. Bill No. 33 of 1971) introduced in the last session of the Assembly."

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I withdraw the Bill.

MR. SPEAKER : The Bill is withdrawn.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கும்,